# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.108/2024**

Deposition of Witness of PW5

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சுரேஷ்குமார் | Calling | : |
| Father/Husband's Name | : | கருப்புசாமி | Age | : |
| Village | : | | | : |
| Taluk | : | | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 19th ஆகஸ்ட் 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காரவலசில் வசித்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 24.01.2022 ம் தேதி இரவு 7.15 மணியளவில் நான் குமரவேல் என்பவருடன் ஈரோட்டில் இருந்து பைக்கில் எங்கள் ஊருக்கு வந்து கொண்டிருந்த போது அய்யகவுண்டன்பாளையத்தில் நாவிதன் காடு என்ற இடத்தில் டமால் என பெரியசத்தம் கேட்டது. 3 வாகனங்கள் இருசக்கர வாகனம் யுனிகான் 1ம், அப்பாச்சி 1ம், ஜுபிட்டர் வாகனம் மோதி கீழே கிடந்தது.2 நபர்களுக்கு தலையில் அடிபட்டு கீழே உட்கார வைத்திருநதார்கள். பின்னர் அன்று இரவு மருத்துவமனை செல்லும் விபத்தில் அடிபட்ட இருவருமே இறந்துவிட்டதாக சொன்னார்கள். அந்த விபத்தின் போது ஒரு நபருக்கு முழங்காலில் காயம் ஏற்பட்டது. வலது கையில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. ஜுபிட்டர் பைக்கில் வந்த நபருக்கு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டிருந்தது. ஜெகதீஸ் என்ற ஒரு நபர் விபத்தில் அடிபட்டவர் பக்கத்து ஊரை சேர்ந்தவர்.ஆஜர் எதிரியை தெரியும். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது சென்று பார்த்தேன். இது சம்பந்தமாக போலீஸார் விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் சம்பந்தப்பட்ட ஜெகதீசின் மாமா குமரவேல் என்றால் சரிதான்.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:03:30 +0530

குமரவேல் வாகனத்தில் தான் நான் ஈரோட்டில் இருந்து மொடக்குறிச்சி வந்தேன் என்றால் சரிதான். நாவிதன்காடு அய்யகவுண்டன்பாளையம் சாலையானது போகவர ஒரே சாலை என்றால் சரிதான். அந்த சாலையில் மின்கம்பம் எதுவும் இல்லை இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். விபத்தின் போது எனது வாகனத்திற்கு முன்னால் சந்திரசேகர் வாகனம், அதற்கு பின்னால் ஜெகதீஸ் வாகனம் வந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரியை விபத்து சமயத்தில் யாரென்று தெரியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரி யாருடைய வாகனத்தில் மோதினார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் அடிபட்டவர்கள் அனைவரையும் ஒரே ஆம்புலன்ஸ் தான் ஈரோடு அரசு மருத்துவ மனைக்கு கொண்டு சென்றார்கள் என்றால் இல்லை, ஜெகதீசையும், எதிரியையும் ஒரு ஆம்புலன்ஸிம், மற்ற இருவரையும் வேறொரு ஆம்புலன்ஸ்சிலும் சென்றார்கள். ஜெகதீஸ் தான் என் வாகனத்திற்கு முன்பாக சென்றார் என்பது எனக்கு  முதலில் தெரியாது, எவ்வளவு துாரத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் சுமார் 30 மீட்டர் துாரத்தில்சென்று இருப்பார். அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர்.

2. விபத்தில அடிபட்ட ஜெகதீஸ்-க்கு பெரிய காயம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் சம்பவ இடத்தில் 2 பேர் இறந்தார்கள். ஆஜர் எதிரி சாலையை கடக்கும் போது ஒரு லாரியை முந்திசெல்லும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் அதுதெரியவில்லை. நான் உண்மையில் ஜெகதீஸ்-க்கு பின்னால் வந்திருந்தால் லாரியை பார்த்து இருப்பேன் என்றும், அந்த சமயத்தில் அங்கு இல்லை என்பதால் தான் லாரியை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் சொன்ன நேரத்தில் இல்லை என்றும், அதனால் தான் லாரியை பார்க்கவில்லை என்றும், காவல்துறையினர் கேட்டுக் கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.08.19 19:03:38 +0530